# அன்பு பகிர்வு இயக்கம்


செய்திமலர்

ஆண்டு சந்தா ரூ.60/-

மலர்: 4 இதழ் : 8 ஜூன் 2008



நகரேலா கிராமம்



முண்டத் கிராமம்




அந்தர்வேலியா கிராமம்

## பீல் ஆதிவாசி பிள்ளைகள் மத்தியில் நடைபெற்ற விடுமுறை வேதாகம பள்ளி

ஆசிரியர் : சகோ. வே. தேவதாஸ்

# பட்லா கிராம ஆலயம்



இராஜஸ்தான் மாநிலம் பான்ஸ்வாடா மாவட்டத்தில் உள்ள கிராமம் பாட்லா. பாட்லா கிராமம் நகரத்தில் இருந்து மிகவும் உள்ளடங்கிய போக்குவரத்து வாகன வசதிகள் இல்லாத மலைப்பாங்கான பகுதி. இங்கு வாழும் மக்கள் பூஜை செய்வதும், மந்திரவாதிகளை நாடுவதும், இறந்த ஆவிகளை வணங்குவதும் போன்ற மூடப்பழக்க வழக்கங்களுக்கு அடிமைப்பட்டிருந்தனர். இவர்கள் தொழில் சாராயம் காய்ச்சி விற்பது, திருடுவது. இந்த சூழ்நிலையில் வாழ்ந்தவர்தான் சகோ. தார்சிங் கட்டாரா.

சகோ. தார்சிங் கட்டாரா சரீரம் முழுவதும் எரிச்சல் வியாதியினால் பல ஆண்டுகள் வேதனைப்பட்டார். அதிக பணம் செலவு செய்தும் மந்திரகிரியைகள் மற்றும் மருத்துவம் செய்தும் சுகம் கிடைக்கவில்லை. இந்நிலையில் கொய்க்கா கிராம ஆலயத்திற்கு வந்தார். ஷாலோம் சுதேச ஊழியர் இவருக்கு இயேசு கிறிஸ்துவைப் பற்றி கூறி ஜெப எண்ணெய் பூசி பாரத்தோடு ஜெபித்தார். தேவன் ஜெபத்தைக்கேட்டு மூன்று வாரத்தில் பூரண சுகத்தைக் கொடுத்தார். 1 வருடம் விசுவாசியாக இருந்தார். தேவன் இவரை பரிசுத்த ஆவியினால் நிரப்பினார். தன் சொந்த ஜனங்கள் இயேசு கிறிஸ்துவை அறிய வேண்டும் என்ற பாரம் ஏற்படவே கல்வானி கிராமத்தில் ஊழியத்தை ஆரம்பித்தார். பிறகு தன்னுடைய சொந்த கிராமமாகிய பாட்லாவில் ஊழியம் செய்தார். தற்போது 25 குடும்பங்களை ஆண்டவருக்குள் வழிநடத்தியுள்ளார். தன்னுடைய சொந்த நிலத்தை ஆலயம் கட்டுவதற்கு காணிக்கையாக கொடுத்தார். இந்த கிராம ஆலயம் கொத்தலரிவிளையை சேர்ந்த சகோ. பால்ராஜ் அவர்கள் குடும்பத்தின் சார்பாக அளிக்கப்பட்ட நிதி உதவி ரூ.48,000,– மதிப்பில் அழகிய ஆலயம் கட்டப்பட்டது.

## ✍ உங்கள் சகோதரனிடமிருந்து....



கிறிஸ்துவுக்குள் மிக அன்பானவர்களே,

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் யாவருக்கும் எங்கள் அன்பு வாழ்த்துக்கள்.

ஜுன் மாத மலர் மூலமாக உங்களுடன் தொடர்பு கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். கடந்த ஐந்து மாதங்கள் நம்மோடு கூட இருந்து ஆசீர்வதித்த தேவனுக்கு ஸ்தோத்திரங்களையும் நன்றியையும் ஏறெடுப்போம்.

கடந்த மாதம் நாம் திட்டமிட்டபடியே (CBC) Children Bible Class Programme 400க்கும் அதிகமான கிராமங்களில் 15,000க்கும் மேலான ஆதிவாசி சிறுவர்களுக்கு சிறப்பாக நடைபெற்றது. ஆயிரத்திற்கு அதிகமான புதிதான ஆதிவாசி பிள்ளைகள் பங்குபெற்று தேவனை ஏற்றுக் கொண்டார்கள். இவ்வருடம் பீல் ஆதிவாசி சிறுவர்கள் மத்தியில் மிகுந்த சந்தோஷம் உண்டானது. ஜெபித்த உங்கள் யாவருக்கும் குறிப்பாக காணிக்கை தந்து உதவின யாவரையும் தேவன்தாமே ஆசீர்வதிப்பாராக!

இந்த ஜுன் மாதம் பள்ளிக்கூடம் திறக்கப்பட்டு, புது கல்வியாண்டிற்குள் நுழையும் மாதம். உங்கள் யாவரின் குடும்பத்தில் உள்ள படிப்பிற்காக, நல்ல இடங்கள் கிடைக்க, படிப்பிற்கான செலவுகளை தேவன் சந்திக்க, பிள்ளைகளை தேவன் அபரிமிதமாக ஆசீர்வதிக்க ஜெபிக்கிறேன்.

மேலும் நம்முடைய பீல் ஆதிவாசி ஊழியர்களின் பிள்ளைகள் மற்றும் நம்மால் விடுதிகளில் தாங்கப்பட்டு வரும் ஆதிவாசி பிள்ளைகள் அனைவரின் படிப்பிற்காக ரூ. 4,00,000/– தேவைப்படுகிறது. தேவன் தாமே இம்மாதத்தில் இத்தேவையை சந்திக்க பாரத்துடன் ஜெபியுங்கள்.

நம்முடைய விடுதி, பள்ளிகளில் படிக்கும் ஆதிவாசிபிள்ளைகளை தேவன் ஆசீர்வதிக்க ஜெபியுங்கள் இதுபோல் ஜுன் மாதம் நடைபெறும் ஊழியர்கூடுகை, மூப்பர்கள் கூடுகை, Compassion மூலமாக ஹிரோலா மற்றும் ஜெரி கிராம Project க்காகவும், 15 இடங்களில் நடைபெறும் ஆலய கட்டுமான பணிகளுக்கான பாதுகாவலுக்காகவும் பாரத்துடன் ஜெபியுங்கள். வளர்ந்து வரும் ஊழியத்தின் தேவைகளை சந்திக்க மாதம் ரூ. 500/– கொடுத்து கிராம ஊழியத்தை தாங்குவோர் 400 பேர் எழும்ப ஜெபியுங்கள். பீல் மக்கள் ஊழியத்தை மற்றவர்களுக்கு அறிமுகம் செய்யுங்கள். பிரதிநிதியாக செயல்பட முன்வாருங்கள்.

ஜுன் 3 முதல் 11 வரை சிங்கப்பூரில் உள்ள தமிழ் மெத்தஸ்டிட் ஆலயத்தில் நடைபெற உள்ள எழுப்புதல் கூட்டம் மற்றும் விஷேசித்த முகாமில் செய்தி கொடுக்க அழைக்கப்பட்டுள்ளோம். தேவன் எங்களை பயன்படுத்த கருத்தாக ஜெபியுங்கள்.

மூத்த மகன் டைட்டஸ் காருண்யா பல்கலைகழகத்தில் MBA., I Year படிக்கவும், இளைய மகன் ஷாலோம் Media Technonogy II Year படிக்கவும், மகள் ஜாய் ஷெக்கினா +1 Rose Mary School (பாளையங்கோட்டையில்) படிக்கவும் தேவன் கிருபை தந்துள்ளார். பிள்ளைகளின் படிப்பிற்காகவும், கர்த்தருக்குள் எழும்பி பிரகாசிக்கவும் பாரத்துடன் ஜெபியுங்கள். தேவ கிருபை உங்கள் அனைவருடன் தங்கியிருப்பதாக.

**“நான் உன்னோடு கூட இருந்து உன்னை ஆசீர்வதிப்பேன்.”** ஆதி. 26:2 –ன் படி தேவன் தாமே உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக!

தேவ அறுவடை பணியில் உங்கள் அன்பு சகோதரன்,

வே. தேவதாஸ்

**மேலும் என்னுடன் தொடர்பு கொள்ள 09377445468**



# பிறனை நேசிக்கும் அன்பு
# பகிர்ந்து கொடுக்கும் அன்பு

சிறப்பு செய்தி : **சகோ. V. தேவதாஸ்**

"நித்திய ஜீவனை பெற்றுக்கொள்ள நான் என்ன செய்ய வேண்டும் என்று இயேசுவினிடத்தில் நியாய சாஸ்திரி ஒருவன் ஆண்டவரை சோதிக்கும்படியாகவும், தன்னை நீதிமான் என்று காட்டிக் கொள்வதற்காகவும் வந்தான். இயேசு அவனுக்கு பிரதியுத்திரமாக வேதத்தில் நீ வாசிப்பது என்ன? என்று கேட்கும்போது **"அவன் பிரதியுத்திரமாக உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு பலத்தோடும் உன் முழுச் சிந்தனையோடும் அன்புகூர்ந்து, உன்னிடத்தில் அன்புகூருவது போல பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்ற எழுதியிருக்கிறது என்றான்."** (லூக்கா 10:27) அதாவது நாம் நித்திய ஜீவனை பெற்றுக்கொள்ள முதலாவது நாம் தேவனை நேசிக்க வேண்டும். இரண்டாவதாக பிறரை நேசிக்கவேண்டும் என்று வேதம் போதிக்கிறது.

**முதலாவதாக தேவனை நேசிப்பது** (Love God)

**"அவன் பிரதியுத்திரமாக உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு பலத்தோடும் உன் முழு சிந்தனையோடும் அன்புகூர்ந்து, உன்னிடத்தில் அன்புகூவது போலு பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்று எழுதியிருக்கிறது என்றான்"** (லூக்கா 10:27)—ல் அன்புகூர் என்று ஆண்டவர் தேவ ஜனத்திற்கு கட்டளையாக, கைக்கொள்ளும்படியாக, கொடுக்கிறார். அகிலத்தையும் படைத்த சர்வ வல்லமையுள்ள தேவன் தன் சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட தேவஜனம் தன்னை நேசிக்க விரும்புகிறார். அவரை 100—க்கு 100 முழு இருதயத்தோடும் நேசிக்க வேண்டும்.

அதாவது இந்த உலகத்தில் வாழும் ஒவ்வொரு தேவ பிள்ளையும் உலகத்தையோ, உலகத்திலுள்ளவர்களையோ, உலக ஆசீர்வாதங்களையோ அதிகம் நேசியாதபடி தேவனிடத்தில் தாமே முதல் அன்பை, முழு அன்பை காட்ட வேண்டும் என்று விரும்புகிறார். அப்படியாக நாம் தேவனை முழுமையாக நேசிப்போம் என்றால் நமது வாழ்வும் அர்ப்பணிப்பும் வித்தியாசமாக இருக்கும். லூக்கா 7 :44—47 வாசித்துப் பாருங்கள்.

**"இவள் மிகவும் அன்பு கூர்ந்தாளே"** என்று இயேசு சாட்சி கொடுக்கிறார். நாமும் இயேசுவை முழுமையாக நேசித்தால் நம் அர்ப்பணிப்பு மற்றவர்களைக் காட்டிலும் வித்தியாசமாயிருக்கும்.

யோவான் 21—ம் அதிகாரத்தை வாசித்துப்பாருங்கள். மனுஷரை பிடிக்கிறவர்களாய் மாற்றப்பட்ட பேதுரு தேவனுக்கு ஊழியம் செய்யாமல் கடலையும், படகையும், வலைகளையும், மீன்களையும் நேசித்து மீன்பிடிக்கும் கரையில் நின்றுகொண்டிருக்கிறார். இயேசு மூன்று முறை "என்னை நேசிக்கிறாயா?"

என்று கேட்ட அந்த அன்பின் குரலுக்கு தன்னை ஒப்புக்கொடுத்தார். ஆடுகளை மேய்க்கும்படியாக ஆத்துமபாரத்தைப் பெற்று எல்லாவற்றையும் பரிபூரணமாக விட்டுவிட்டு வாழ்நாள் முழுவதும் ஆயிரமாயிர ஆத்துமாக்களை ஆதாயம் செய்தார். இரத்த சாட்சியாய் தன் ஜீவனையும் கொடுத்தார். அதற்கு காரணம் அவர் இயேசுவின் மேல்வைத்த அன்பு. சகோதரனே, சகோதரியே நீ கோடிக்கணக்கான ஆடுகளை (ஆத்துமாக்களை) குறித்த பாரத்தைப் பெற்று அவருக்காக நீ ஊழியம் செய்வாய். இல்லையென்றால் ஆத்துமபாரம் பெற்று ஊழியங்களுக்காக ஜெபித்து தாங்க முன் வருவாய். நீ தேவனை நேசிக்கிறாயா?

**இரண்டாவதாக பிறனை நேசிப்பது** (Love Neighbour)

ஒரு நாணயத்திற்கு இருபுறம் இருப்பதுபோல நித்திய ஜீவனை பெற்றுக்கொள்ள முதலாவது தேவனை நேசிக்க வேண்டும். இரண்டாவது பிறனை நேசிக்க வேண்டும். ஒவ்வொரு (பிற) மனிதனும் நம்மைப் படைத்த அதே தேவனால் தேவசாயலாக உருவாக்கப்பட்டிருக்கிறான். எனவேதான் நாம் நமக்குப் பிறனாக இருப்பவர்களை நேசிக்க வேண்டும். தன்னை நீதிமானாக காட்டிக் கொள்ள நினைத்த நியாயசாஸ்திரி தனக்குப் பிறன் யார் என்ற இயேசுவிடம் கேட்க, இயேசு தாமே அழகான நல்ல சமாரியன் உவமையை கூறினார். அதை தியானிக்கும்போது 3 விதமான சமுதாயங்களை குறித்து இயேசு விளக்கினார்.

**1. கள்ளர் கையில் அகப்பட்டுள்ள சமுதாயம்**

“இயேசு பிரதியுத்தமாக ஒரு மனுஷன் எருசலேமி–ருந்து எரிகோவுக்குப் போகையில் கள்ளர் கையில் அகப்பட்டான், அவர்கள் அவன் வஸ்திரங்களை உரிந்துகொண்டு, அவனைக் காயப்படுத்தி, குற்றுயிராக விட்டுபோனார்கள்” (லூக். 10:30). மனிதனுடைய வாழ்க்கைப் பிரயாணத்தில் பிசாசானவன் குறுக்கிடுகிறான். பிசாசின் கண்ணிகளால் அகப்பட்ட ஆயிரம் ஆயிரமான மக்களை நாம் காண்கிறோம். சாபம், நோய், வறுமை, கொலைவெறி, திருட்டு, குடி, என்ற பாவங்களுக்கு அடிமைப்பட்டு குற்றுயிராய் விழுந்து கிடக்கச் செய்கிறான். ஆனால் அவர்களது வாழ்வு முடிவடையவில்லை, அவர்களைக் கவனிப்பார், கேட்பார், விடுவிப்பாரில்லாமல் அங்கலாய்த்துக் கொண்டிருப்பார்கள்.

சில ஆண்டுகளுக்கு முன்பாக சற்று வயதான பீல் ஆதிவாசி மனிதர் இடுப்பில் துண்டு, கையில் மக்காச்சோளம், பக்தியுடன் எங்களிடம் வந்து எல்லாரையும் சுகமாக்கு மதராசி (தமிழ்நாட்டைச்சேர்ந்தவர்) எங்கே என்ற கேட்டார். நாங்கள் அவரிடம் பேசியபொழுது, “என்னுடைய மகள் அநேக நாட்களாக புத்தி சுவாதீனமில்லாமல் பைத்தியமாக உடையின்றி அலைந்துகொண்டிருக்கிறாள். மந்திரவாதிகளிடமும், மருத்துவர்களிடமும் சென்று எங்களுக்கு ஒரு பயனுமில்லை. நாங்கள் அனைவராலும் கைவிடப்பட்டவர்களாக காணப்படுகிறோம். எல்லாரையும் சுகமாக்கும் புதுக் கடவுள் ஒன்று தமிழகத்தி–ருந்து வந்திருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டு உங்களிடம் வந்தோம். நீங்களாவது எங்களை கவனிப்பீர்களா?” என்ற கேட்டார். ஏன் இதை வாசிக்கிற உங்களைச் சுற்றியும் அநேகர் ஆவி, ஆத்துமா, சரீரத்தில் தேவையுள்ளவர்களாய் வழி காட்டுகவர்களில்லாமல் கள்ளர் கையில் அகப்பட்டவர்களாய் காணப்படுகிறார்கள்.

## 2. விலகி ஓடும் சமுதாயம்

இயேசு இரண்டாவதாக லூக்கா 10:31,32ல் விலகியோடும் சில மனிதர்களை சுட்டிக் காட்டுகிறார். ஆசாரியரும், லேவியரும் யார்? தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட அபிஷேகிக்கப்பட்ட தேவ பிள்ளைகள். தேவனுக்கடுத்த காரியங்களிலும் பக்திக்குரிய காரியங்களிலும் நேர்த்தியாய் இருக்கும் இவர்கள், அதே சமயம் தேவசாய—ல் படைக்கப்பட்டு குற்றுயிராய் கிடக்கும் மனிதரைக்கண்டு விலகி ஓடுகிறார்கள். இந்த உலகத்தில் தங்களை பக்தியுள்ளவர்கள், தேவபிள்ளைகள், தொண்டு செய்பவர்கள் என்று சொல்—க்கொள்ளும் அநேகமாயிரம் ஜனங்கள் இப்படிப்பட்ட குற்றுயிராய் கிடக்கும் ஜனங்களைக் கண்டு விலகியோடுகிறார்கள். ஒருமுறை இரயி—ல் பயணம் செய்துகொண்டிருக்கும்போது ஒரு கண்ணியமான மனிதரிடம் நான் செய்யும் ஊழியங்களைப் பற்றி கூறியபொழுது, "இந்த ஆதிவாசிகள் நாய்கள், பன்றிகள் போன்றவர்கள், இவர்கள் எப்படி தங்கள் வாழ்க்கையைத் திருத்திக் கொள்வார்கள்". என்று ஏளனமாக பேசினார். இப்படிப்பட்டவர்கள் சமுதாயத்தில் பக்திமான்களாய், உயர்ந்தவர்களாய் காணப்பட்டாலும் விலகியோடுகிற கூட்டத்தைச் சார்ந்தவர்கள்.

தேவஜனமென்று சொல்—க்கொள்ளும் நாம், தேவனுடைய சபையாக விளங்கும் நாம் லேவியனைப் போல, ஆசாரியனைப் போல விலகியோடுகிறோமா? சிந்தித்துப் பார்ப்போம். சமுதாயத்தில் மற்றவர்களை சுட்டிக் காண்பிப்பதற்கு முன்னதாக இயேசு தேவஜனமாகிய லேவியர், ஆசாரியர்களாகிய நம்மைப் பார்த்து கேட்கிறார். "நீயும் விலகி ஓடுகிறாயோ?"

## 3. நல்ல சமாரியன் சமுதாயம்

சமாரியன் என்றால் குறைவாக, தாழ்வாக எண்ணப்பட்டவர்கள். குற்றுயிராய் கிடக்கும் வழிப்போக்கனிடத்தில் கிடடவந்து தன்னுடைய **உடைமைகளாகிய** எண்ணெய், திராட்சைரசத்தை உபயோகப்படுத்தி காயங்களைக் கட்டி மயக்கத்தை தெளியவைக்கிறான்.

தன்னுடைய விலையேறப்பெற்ற நேரத்தை அவனுக்காக செலவழிக்கிறான். தன்னுடைய வாகனத்தில் ஏற்றி எந்த பிரச்சனையையும் எதிர்நோக்கத்தக்கதாக பொறுப்புடன் சத்திரக்காரனிடத்தில் ஒப்படைக்கிறான். அவனுடைய பூரண சுகத்திற்காக இன்னும் செலவிடவும் ஆயத்தமாக உள்ளான். அவன் பெற்றுக்கொண்ட தேவ அன்பையும், ஆசீர்வாதத்தையும் தேவ சாயலாகப் படைக்கப்பட்டு கள்ளர் கையில் அகப்பட்டு குற்றுயிராய் கிடக்கும் மனிதனுக்கு பகிர்ந்து கொடுக்க முன்வருகிறான்.

நீயும்போய் அந்தப்படியே செய் என்று சொல்—ய இயேசு நாம் ஒவ்வொருவரும் இப்படிப்பட்ட நல்ல சமாரியனாக செயல்பட வேண்டுமென்று விரும்புகிறார்.

இந்த நல்ல சமாரியன் பணியைத் தான் நம்முடைய அன்பு பகிர்வு இயக்கம் மூலம் பீல் மக்கள் மத்தியில் செய்வதற்காக ஆண்டவர் என்னையும், என் மனைவியையும் ஒரு தரிசனத்தோடு தெரிந்துகொண்டு **(17)** வருடங்களாக செய்து வருகிறார். இதன் மூலம் அநேகம் ஆயிரம் ஆயிரம் குற்றுயிராக விடப்பட்ட ஜனங்கள் வாழ்வை பெற்றுள்ளனர். தேவனுக்கே மகிமை.

# SHALOM - CHILDREN BIBLE CLASS

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் ஷாலோம் ஊழியத்தில் சுமார் 25,000 Sunday Class பிள்ளைகளை தேவன் கொடுத்திருக்கிறார். இதில் படித்த மற்றும் படிப்பறிவு இல்லாத பிள்ளைகளும் உண்டு. இந்த பிள்ளைகளுக்கு கடந்த வருடங்களில் Seva Bharat ஸ்தாபனத்தின் மூலம் V.B.S. புத்தகங்கள் வாங்கி பயிற்சி கொடுத்தோம். ஆனால் அந்த பாட புத்தகங்கள் (நகர்புற Standard –க்கு ஒத்ததாக இருந்ததால்) நமது பீல் ஆதிவாசி பிள்ளைகள் புரிந்து கொள்வதற்கு கடினமானதாக இருந்தது. இந்த காரியங்களுக்காக தேவனை நோக்கி ஜெபித்தபோது தேவன் இந்த வருடம் ஆதிவாசி பிள்ளைகள் இலகுவாக புரிந்து கொண்டு படிக்கத்தக்கதாக V.B.S. புத்தகங்களை தயார் பண்ணுங்கள் என்று ஆலோசனை கொடுத்தார்.

ஆகையால் Training Unit –ல் இருக்கிற B.Th., படித்த நான்கு பேர்களும் Sis. Vahitha Devadoss –வுடன் இணைந்து ("JESUS IS SAVIOUR") "இயேசுவே இரட்சகர்" என்ற தலைப்பில் 10 நாட்களுக்கும் 10 பாடங்களை வேதாகமத்தி–ருந்து எடுத்து Students Work Book தயார் செய்வதற்கு தேவன் கிருபை கொடுத்தார். இந்த 10 நாள் தலைப்புக்கு ஏற்ற மாதிரி மனப்பாட வசனங்களும், பாடல்களும் (ஹிந்தி, குஜராத்தியில்) தயார் செய்யப்பட்டது. Students Work Book மற்றும் Teachers Guide எல்லாமே ஹிந்தி, குஜராத்தி என்று தனித்தனியாக Print செய்தோம். எழுதப்படிக்க தெரிந்த பிள்ளைகளுக்கு மட்டும் Work Book கொடுக்கும்படியாய் தீர்மானித்து, 15,000 Work Book அச்சடித்து சபைகளுக்கு கொடுத்தோம்.



**பயிற்சிகள்**

இந்த V.B.S. –ஐ நாங்கள் Shalom CBC என்று அழைக்கிறோம். இந்த Shalom CBC –யில் Directors Training, Dahod –ல் நமது பயிற்சி கூடத்தில் ஏப்ரல் மற்றும் மே முதல் வாரத்தில் நடத்தினோம். அனைத்து 405 சுதேச ஊழியர்களும் அவர்களோடு Sunday Class Teachers –ம் சேர்ந்து வந்து Directors Training எடுத்தார்கள். இந்த Training –ல் சுமார் 600 பேர் பயிற்சி பெற்றார்கள். 4 Batch ஆக பிரித்து ஒவ்வொரு Batch –லும் 150 பேர் பயிற்சி பெற்றார்கள். இதில் மிக நேர்த்தியாக சிறுவர் ஊழியம் ஏன் அவசியம் என்ற தலைப்பில் சகோ. தேவதாஸ் மற்றும் சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் மிகவும் அழகாக விளக்கி அந்த Director –களுக்கு சிறு பிள்ளைகளைக் குறித்த பாரத்தைக் கொடுத்தார்கள். ஒவ்வொருவரும் சிறு பிள்ளைகளை குறித்த பாரத்தைப் பெற்று, எல்லா பீல் சிறுபிள்ளைகளையும் இயேசுவுக்கு சொந்தமாக்குவோம் என்று வைராக்கியமாய் சென்றார்கள்.



**சிறுவர்களின் மனநிலை**

இந்த பயிற்சியில் Beginners, Primary, Junior, Intermediate பிள்ளைகளின் வயது பிரிவுகளையும் அந்தந்த வயது பிரிவினர்களின் மனநிலை மற்றும் சுபாவங்கள் பற்றியும், இந்த பிள்ளைகளின் சுபாவங்களுக்குத் தக்கதாக எப்படி நடத்த வேண்டும், எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற காரியங்களுக்காக Directors –க்கு பயிற்சி கொடுக்கப்பட்டது.

**பாடல் வேளை**

Shalom CBC பாடல்கள் சிறுவர்களுக்கு மிகவும் உற்சாகத்தைக் கொடுக்க கூடியதாக இருந்தது. பாடல்கள் மூலமாகவே அந்த நாளுக்கு உரிய பாடங்களை வெகு விரைவில் கற்று கொள்ளுகிற அளவுக்கு மிக நேர்த்தியாய் கர்த்தர் அமைத்துக் கொடுத்தார். பாடல் வேளையில் பயிற்சியில்




உள்ளவர்கள் அனைவருமே ஆடி,பாடி பரவசமடைந்தார்கள். Action Songs எல்லாம் மிக சிறப்பாக கற்றுக் கொடுக்கப்பட்டது.

**குறு நாடகங்கள்**

ஒவ்வொரு நாளும் உள்ள பாட தலைப்பில் குறு நாடகங்கள் நடித்துக் காட்டப்பட்டது. நாடகங்களைப் பார்க்கும் போது மிக விரைவில் அவர்கள் மனதில் பதிந்து விட்டது.

**ஆத்துமா விலையேறப் பெற்றது**

இந்த பயிற்சியில் சிறு பிள்ளைகள் எவ்வளவு முக்கியமானவர்கள் என்றும் "சிறு பிள்ளைகள் என்னிடத்தில்வர இடம் கொடுங்கள். அவர்களை தடை பண்ணாதிருங்கள்" என்று இயேசு சொன்னார் என்றும், தேவனுடைய இராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது என்றும், இந்தச் சிறியரில் ஒருவனுக்கு எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்களென்று இயேசு சொன்னார் என்றும் பல வகைகளில் அவர்களுக்ளு பேசப்பட்டது. அவர்கள் சிறுவர்களைக் குறித்த ஆத்தும பாரத்தை பெற்றுக் கொண்டார்கள்.

நமது Shalom CBC யின் நோக்கமே "எந்த பீல் சிறுவரும் நரகத்திற்கு போகக்கூடாது" எல்லா சிறுவர்களும் இரட்சிக்கப்பட வேண்டும். இந்த 10 நாட்களுக்குள்ளாய் எல்லா பிள்ளைகளும் இரட்சிக்கப்பட வேண்டும் என்கிற வாஞ்சையுடனும், பாரத்துடனும் இந்த Shalom CBC Training கொடுக்கும்படியாய் தேவன் கிருபை செய்தார். இப்பொழுது எல்லா சபைகளிலும் Shalom CBC Programme நடந்து கொண்டிருக்கிறது. அதில் விசுவாசி பிள்ளைகளைத் தவிர மற்ற புற இன பிள்ளைகளும் வந்து படிக்கிறார்கள்.




"நாம் நினைப்பதற்கும், வேண்டிக்கொள்வதற்கும் அதிகமாய் செய்கிற கர்த்தர் இந்த Shalom CBC யை மிக அபரிமிதமாய் ஆசீர்வதிப்பாராக!

# மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனை

நாள்
**ஜுன் 06 - 2008**
**சனிக்கிழமை**

நேரம்
**காலை 9 மணி**

இடம்
**திறப்பின்வாசல் ஜெபம்,**
நாலுமாவடி,

பிரதிஷ்டை செய்யப்படுபவர்கள்
1. **ரானியா பாபோர்,** காப்பரி கிராமம், குஜராத்
2. **சமரியா பாகேல்,** பார்டியா கிராமம், மத்தியபிரதேசம்

தேவ செய்தி :
## சகோ. வே. தேவதாஸ்

கன்னியாகுமரி மாவட்டத்தில்...

# ஷாலோம் பங்காளர் கூடுகை

நாள்
**ஜுன் 29 - 2008**
**ஞாயிற்றுக்கிழமை**

நேரம்
**மாலை 6.00 மணி**

இடம்
**சிங்களேர் நினைவு மண்டபம்,**
C.S.I. சர்ச்வளாகம், மார்த்தாண்டம்

தொடர்பு : **Bro. Selvam,** Cell : 93447-24395
**Bro. George,** Cell : 94439-93423
**Bro. Kingbert,** Cell : 94439-93423



# ஆதிவாசி மாணவர்களுக்கு கல்வியறிவு நிதி உதவி

தேவ கிருபையினால் சுமார் 80 இலட்சத்திற்கும் அதிகமான பீல் ஆதிவாசிகள் மத்தியில் குஜராத், இராஜஸ்தான், மத்தியபிரதேசம் மாநிலங்களில் கடந்த 16 வருடங்களில் சுமார் 600 கிராமங்களில் சுவிஷேசம் அறிவித்து சபைகளை ஸ்தாபிக்க தேவன் கிருபை செய்துள்ளார். அந்தகாரத்திலும், குடிப்பழக்கத்திலும் பாவ பிடியிலும் வாழ்ந்து கொண்டிருந்த சுமார் 20,000 குடும்பங்கள் இயேசு கிறிஸ்துவில் புதுவாழ்வு பெற்றுள்ளார்கள். தேவனுக்கே மகிமையுண்டாவதாக.

பொதுவாக நாம் அறிந்தபடி பீல் ஆதிவாசிகள் தங்கள் பிள்ளைகளை பள்ளிக்கூடத்திற்கு அனுப்பமாட்டார்கள். அங்கு பள்ளிக்கூட வசதிகளும் குறைவு. தொண்டு செய்யும் மனப்பான்மையுடன் பணி செய்யும் ஆசிரியர்களும் கிடையாது. பள்ளிக்கூடங்கள் செல்வதற்கு பல மைல்கள் நடந்து செல்ல வேண்டும். பெரும்பாலான கிராமங்களில் மின்சார வசதி இல்லாதபடியால் இரவு நேரங்களில் படிக்க வாய்ப்பு கிடையாது. ஆதிவாசி பிள்ளைகளை படிக்க உற்சாகப்படுத்தும் பெற்றோர்களும் படித்தவர்கள் கிடையாது. பொதுவாக கிராம சூழ்நிலைகள் இரவு நேரங்களில் குடிகாரர்களும், திருடர்களுமாய் சுற்றிவருவதால் படிப்பதற்கான சூழ்நிலைகள் கிடையாது. அப்படியே சற்று படிக்க வாஞ்சையாக இருந்தாலும் 5–வது வகுப்பிற்கு மேல் படிப்பது கடினம். கிராம ஆரம்ப பள்ளிகளில் ஒழுங்காக எழுத படிக்க கூட தெரியாத சூழ்நிலைகள் உண்டு. பெரும்பாலான கிராம மக்கள் தங்கள் பிள்ளைகளை நகரங்களில் தாங்கள் கூ– வேலை செய்யும்போது தங்கள் சிறுபிள்ளையை பாதுகாத்துக் கொள்ள படித்துக் கொண்டிருக்கும் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு செல்வார்கள். ஒவ்வொரு கிராமங்களிலும் 8ம் வகுப்பு வரை படித்து பாஸ் பண்ணிணவர்கள் மிகக் குறைவாய் இருப்பார்கள். அதிலும் மேலாக 10–ம் வகுப்பு, 12ம் வகுப்பு படித்து பாஸ் பண்ணிணவர்களை கைவிரல் விட்டு

எண்ணிவிடலாம். ஒரு கிராமத்தில் கல்லூரி படிக்கும் மாணவர்களை பார்ப்பது மிக மிக அரிது. இவைகள் எல்லாவற்றிலும் பார்க்கும்போது ஒரு ஆதிவாசி மாணவன் நன்றாக படிக்கும் போது அண்டை வீட்டார் அல்லது உறவினர் அவனை படிக்கவிடாதபடிக்கு பொறாமையுடன் அசுத்த ஆவிகளை ஏவிவிடுவார்கள். மேலும் 8–ம் வகுப்புக்கு மேல் படிக்கவேண்டுமென்றால் பிள்ளைகளுக்கு உணவு வசதி நோட்டு, புத்தகங்கள் மற்றும் படிப்பதற்கான செலவீனங்களை ஏற்றுக் கொள்ள பொருளாதார வசதி குறைவு. மேலும் அநேகர் வறுமைகோட்டிற்கு கீழ் இருப்பதினால் தங்கள் பிள்ளைகளை படிக்க வைக்க மாட்டார்கள். இட ஒதுக்கீடு இவர்களுக்கு இருந்தாலும் அதை பெற்றுக் கொள்ளக்கூடிய கல்வித் தகுதி அவர்களுக்கு இல்லாதபடியினால் ஒவ்வொரு துறையிலும் ஆதிவாசி மாணவர்கள் முன்னேறி வர இயலாமல் தடை ஏற்படுகிறது.

ஆனால் இப்பொழுது இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு பாவம், சாபம், பிசாசு இவைகளி–ருந்து விடுதலைபெற்ற விசுவாசக் குடும்பங்கள் தங்கள் பிள்ளைகள் தங்களைப் போல் வாழக்கூடாது, தங்கள் பிள்கைள் படித்து சாட்சியுடன் வாழ வேண்டும் என்று வாஞ்சையுடன் எதிர்நோக்கி இருக்கிறார்கள். ஆகவே நானும் என் மனைவியும் இந்த தேவைகளை கண்டறிந்தவர்களாய் பாரத்துடன் ஒவ்வொரு வருடமும் நம்மால் முடிந்த கல்வியறிவு பணிக்காக முடிந்த உதவிகளை செய்து வருகிறோம்.

கடந்த இரு நூற்றாண்டுகளில் மேல்நாட்டு மிஷனெரிமார்கள் நமக்கு சுவிசேஷ ஒளியை தந்து ஆண்டவரண்டை நடத்தி அழகுமிகு ஆலயங்களைக் கட்டிக் கொடுத்தார்கள். இன்று தமிழ்நாட்டில் மட்டுமல்ல இந்தியாவில் பல நகரங்களில் அன்று மிஷனெரிமார்களால் கொடுக்கப்பட்ட கிறிஸ்தவ கல்வி நிலையங்கள் மூலமாக மூன்று நான்கு தலை முறையாக நாம் கல்வியறிவைப் பெற்று வருகிறோம். கிறிஸ்தவர்கள் மட்டுமல்ல ஒவ்வொரு ஜாதி சமயத்தினரும் கல்வியறிவைப் பெற்றுக் கொள்வதற்கு ஆசீர்வாதமாக இன்றும் அமைந்து வருகிறது. இது நாம் மறுக்க முடியாத உண்மை. இன்றைக்கு கிறிஸ்துவின் அன்பையும், கல்வியறிவையும்

பெற்ற நாம் கல்வியறிவில்லாதவர்களுடைய கண்களை திறக்க வேண்டியது நம்முடைய கடமையாகும். தேவன் இந்த பீல் மக்களை தெரிந்தெடுத்து அற்புத அடையாளங்களோடு சுதேச ஊழியர்களை தெரிந்தெடுத்து கிராமங்கள் தோறும் சபைகளை தேவன் உருவாக்கி வருகிறார். ஆகவே கீழ்காணும் திட்டங்களை ஆவியானவருடைய ஒத்தாசையோடு நிரப்ப பிரயாசப்படுகிறோம்.

தாகோத் (குஜராத்), பான்ஸ்வாடா (இராஜஸ்தான்), ஜாபுவா (மத்தியபிரதேசம்) ஆகிய மூன்று மாவட்டங்களிலும் 2010–ஆம் ஆண்டுக்குள் 10 பள்ளிக்கூடங்கள் கட்டி எழுப்பவேண்டும்.

10 ஆயிரம் பீல் ஆதிவாசி மாணவர்களை பராமரிக்கக்கூடிய 100 ஆதிவாசி மாணவர்கள் விடுதிகளை மூன்று மாநிலங்களிலும் எழுப்ப வேண்டும்.

12–ம் வகுப்பு முடித்துவிட்டு உயர்கல்வி மற்றும் தொழில் கல்வி படிக்க முன்வரும் விசுவாசி பிள்ளைகளை முழுமையாக நிதி உதவி கொடுத்து, ஆலோசனைகள் மற்றும் பயிற்சி கொடுத்து தாங்க வேண்டும்.

இதன் மூலமாக 10 வருடங்களில் இந்த மூன்று ஆதிவாசிகள் நிறைந்த இந்த மாவட்டங்களிலும் குறைந்தது 1000 ஆதிவாசி இளைஞர்கள் தங்கள் சமுதாயத்தில் சிறந்த தலைவர்களாக, அதிகாரிகளாக தொண்டு செய்து தங்கள் மாவட்டங்களை முன்னேற்ற வழி செய்பவர்களாக மாறுவார்கள் என்பது எங்கள் பாரமும் தரிசனமுமாகும்.

### *உங்கள் பங்கு*

1. பீல் ஆதிவாசி சிறுவர்கள் கல்வியறிவு பெற்று நல்ல சமுதாயத்தை உருவாக்க ஜெபியுங்கள்.

2. ஒரு பீல் ஆதிவாசி மாணவரை மாதந்தோறும் ரூ. 400/– கொடுத்து ஜெபித்து தாங்க முன் வாருங்கள்.

3. இந்த ஜுன் மாதத்தில் மேற்கண்ட மாணவர்களின் பள்ளிக்கான கட்டணம்

(School Fees, Dress, Note Books) வாங்குவதற்கு ஒரு மாணவனுக்கு ரூ. 500/– வீதம் 800 மாணவர்களுக்கு **4 இலட்ச ரூபாய்** தேவைப்படுகிறது. உங்கள் குடும்பத்தின் சார்பில் அல்லது சபை, ஜெபக்குழு மூலமாக ஒரு சில மாணர்வர்களையாவது தாங்க முன் வாருங்கள். நான்கு மாணவர் விடுதிகள் மற்றும் இராஜஸ்தானிலும், குஜராத்திலும் பள்ளிக்கூடம் நடத்துவதற்கு அனுமதி கிடைத்துள்ளது. நிலம் வாங்கவும், பள்ளிக்கூடம், கட்டிடங்கள் கட்டவும் தாராளமாக கொடுக்கக்கூடிய நிதியாளர்களை தேவன் எழுப்ப பாரத்தோடு ஜெபியுங்கள். **“மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்.”** (மத்தேயு 25:40) இந்த வசனத்தின்படி பீல் ஆதிவாசி மாணர்களுக்காக நீங்கள் தியாகத்தோடு கொடுக்கும் நிதி உதவிகளை ஆண்டவர் ஏற்றுக் கொண்டு **“உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள்; உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும்”** (ஏசாயா 53:13) என்ற வசனத்தின்படி கர்த்தர் உங்கள் சந்ததிகளை ஆசீர்வதிப்பாராக. காணிக்கை அனுப்பும்போது உங்கள் பிள்ளைகளுக்கான ஜெபக்குறிப்புகளை எங்களுக்கு அனுப்பி வையுங்கள். நாங்களும், ஊழியர்களும் உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் ஜெபிக்கிறோம்.

RtúTôÕ Sm êXm Lp®V±Ü ùTtß YÚm
Àp B§Yô£ UôQYoL°u ®TWm.

| | | |
|---|---|---|
| 1. | அனைத்து சுதேச ஊழியர்களின் பிள்ளைகள் | – 410 |
| 2. | ஐ.பி. மிஷன் விடுதி ஜாலோத், குஜராத் | – 90 |
| 3. | ஷாலோம் விடுதி ஜெசவாடா, குஜராத் | – 30 |
| 4. | ஷாலோம் விடுதி அந்தர்வே–யா, மத்தியபிரதேசம் | – 25 |
| 5. | ஷாலோம் அனாதை பிள்ளைகள் ஆசிரமம் கோய்க்கா, இராஜஸ்தான் | – 25 |
| 6. | ஷாலோம் மிஷன் பள்ளி & விடுதி, இராஜஸ்தான் | – 220 |
| | மொத்தம் | – 800 |

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்



| | | |
|---|---|---|
| மாணவனின் பெயர் | : | **டேவிட் புரியா** |
| தகப்பனார் பெயர் | : | பூர்சன்பாய் புரியா |
| தாயார் பெயர் | : | மீராபேன் |
| பிறந்த நாள் | : | 17–07–1996 |
| படிக்கும் வகுப்பு | : | V |
| சொந்த ஊரின் பெயர் | : | அந்தர்வே–யா |
| தாலூகா | : | சந்திராம்பூர் |
| மாவட்டம் | : | ஜாபுவா |
| மாநிலம் | : | மத்தியபிரதேசம் |
| தங்கி படிக்கும் விடுதி | : | Home |

**மாணவனின் பெற்றோரைப் பற்றி சில வரிகள்:–**

இந்த மாணவனின் தகப்பனார் இயேசுவை அறியாத குடும்பத்தில் பிறந்தவர். அதிகமாக சாராயம் குடித்தல், திருடுதல், விபச்சாரத்தில் ஈடுபடுதல், பீடி குடித்தல் மற்றும் தம்பாக்கு போடுதல் போன்ற பாவங்களுக்கு அடிமைப்பட்டு மிகவும் மோசமானவராக வாழ்ந்து வந்தார். வாழ்க்கையில் சமாதானம் இல்லாமல் மிகவும் வேதனைப்பட்டார். பக்கத்து கிராமமாகிய ரூன்கேடா என்ற கிராமத்தில் இயேசு கூட்டம் நடைபெற்று வருவதாகவும், அதில் வியாதியுள்ள அநேகருக்கு விடுதலை கிடைப்பதாகவும் கேள்விப்பட்டு அந்த கூட்டத்திற்குச் சென்றார். அங்கு பாடிய பாடல்கள், கேட்ட வசனங்கள் அந்த சகோதரரை தேவன் பக்கமாக இழுத்தது. இதுதான் உண்மையான தெய்வம் என்று இயேசுவை ஏற்றுக் கொண்டார். தன்னுடைய பெற்றோரையும் கூட்டத்திற்கு அனுப்பினார். அவர்களும் இயேசுவை ஏற்றுக் கொண்டார்கள். பின்பு முழு குடும்பமாக இயேசுவை ஏற்றுக் கொண்டு விசுவாசத்தில் வளர்ந்தார்கள். பூர்சன்பாய் தன்னுடைய வாழ்க்கையை அர்ப்பணித்து தன்னுடைய சொந்த கிராமத்தில் வல்லமையாக ஊழியம் செய்து வருகிறார்.

**மாணவனின் திறமை, தாலந்து மற்றும் வாஞ்சை:-**

ஜெபிப்பதிலும் பாடல் பாடுவதிலும் அதிக உற்சாகம் உண்டு. கபடி, கோகோ போன்ற விளையாட்டுகளில் ஆர்வம் உண்டு. நன்றாக படிப்பான். அமைதியான குணம் உடையவன். படித்து முடித்து பின்பு டாக்டராக மாற வேண்டும் என்ற வாஞ்சை.

**ஜெபியுங்கள்:-**

விசேஷித்த ஞானமும், கிருபையும் தேவன் கொடுக்கவும், பெற்றோர் செய்கிற ஊழியங்களை கர்த்தர் ஆசீர்வதிக்கவும், தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்.

**இச்சிறுவனைத் தாங்குபவர் :** Miss. Priyadharisini, Aruppukottai.

**(இந்த சிறுவனைப் போல் இன்னும் 285 பிள்ளைகளுக்கு ஆதரவாளர்கள் தேவை.)**

# சுதேச ஊழியர் சாட்சி – சகோ. காளியாபாபோர்




இந்த ஊழியரின் பெயர் காளியாபாபோர். இவர் இராஜஸ்தான் மநிலம் பான்ஸ்வாடா மாவட்டத்திலுள்ள வட–பாடா கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. மந்திரவாதிகளுக்கும் அசுத்த ஆவிகளுக்கும் அடிமைப்பட்டு கிடந்த இவர்கள் வாழ்வில் மூட நம்பிக்கைகள் நிறைய காணப்பட்டன. இவர்கள் தங்களை விடுவிப்பார் யாருமின்றி கலங்கி சாராயத்திற்கும் அனைத்து வகையான பாவங்களுக்கும் அடிமைப்பட்டு காணப்பட்ட இவர் வியாதியின் பிடிகளில் சிக்குண்டார். இவருடைய கைகளில் குஷ்டரோக வியாதியினால் அவதிப்பட்டார். அநேக மந்திரவாதிகளிடம் சென்று மந்திரபூஜைகள் செய்தும் எந்த பலனுமில்லை. ரூ.8000–ம் செலவு செய்தும் மருத்துவ சிகிச்சைகளும் பலன்தரவில்லை. மிகவும் சோர்ந்திருந்த நேரத்தில் இயேசுவைப்பற்றி அறிந்து ஷாலோம் ஆராதனை நடைபெற்ற இடத்திற்கு சென்றார். ஷாலோம் சுதேச ஊழியர் இயேசுவைப்பற்றி கூறி அவருக்காக ஜெபித்தார். தேவன் அந்த நாளிலே அவருடைய பாவங்களை மன்னித்து வியாதியி–ருந்து விடுதலை தந்தார். இதன் மூலம் அவருடைய முழுக் குடும்பத்தாரும் ஆண்டவரை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டனர்.

தேவன் தனக்கு செய்த நன்மைளை மற்றவர்களுக்கும் அறிவிக்க ஆரம்பித்தார். தேவன் அவரை பரிசுத்த ஆவியினால் நிரப்பி ஊழியபாரத்தை கொடுத்தார். தற்பொழுது ஷாலோம் ஊழியத்தின் மூலம் குறைந்த கால பயிற்சி பெற்று அவருடைய சொந்த கிராமத்தில் ஊழியம் செய்து வருகிறார். ஊழியருக்காகவும், அவருடைய குடும்பத்திற்காகவும் பாரத்தோடு ஜெபியுங்கள்.

இவரைத் தாங்குபவர் : **சகோ. K.N. ராஜன்,** மார்த்தாண்டம்

## பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக CBC க்கான ஆசிரியர்களுக்காக விசேஷித்த பயிற்சி முகாம்






CBC புத்தகங்கள்






CBC பயிற்சி கொடுக்கப்படுகிறது











CBC பயிற்சி பெற்றவர்கள்

சகோ. K.N. ராஜன் (இயேசு அதிசயங்கள் செய்கிறார் ஊழியங்கள்) அவர்கள் சபையில் வைத்து 2 சுதேச ஊழியர்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள்.





சகோ. ரமேஷ், சகோ. காளியா பாஸ்டர் தங்களுடைய சாட்சி பகிர்ந்து கொள்கிறார்கள்





4 கிராம ஆலயங்கள் கட்ட கொடுத்த காணிக்கைக்காக ஜெபம்






Ps. ஆமோஸ் அவர்கள் சபையில் வைத்து A.G. சபை போதகர்களுக்கான விசேஷித்த போதகர் கூடுகை நடைபெற்றது. இந்த கூட்டத்தில் புதிதாக 2 மிஷனெரிகளை தாங்க முன் வந்தார்கள்.






## சுதேச ஊழியர் சாட்சி – சகோ. ரமேஷ் மேடா



இந்த ஊழியரின் பெயர் ரமேஷ் மேடா. இவர் குஜராத் மாநிலம் தாகோத் மாவட்டத்திலுள்ள ஜெரி குரூத் கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. இவர் இயேசுவை அறியாததற்கு முன்னதாக மிகவும் பாவத்தில் வாழ்ந்து வந்தார். சாராயம் மற்றும் விபச்சாரம் போன்ற பலவிதமான பாவப்பழக்கங்களுக்கு அடிமைப்பட்டு வாழ்ந்து வந்தார். **01.11.2000–**யில் பள்ளிப்படிப்பை முடிக்காமல் பாதியில் வேலைக்காக அகமதாபாத் சென்றார். நோயினால் பாதிக்கப்பட்டு அங்கே அவர் மூச்சுவிட மிகவும் கஷ்டப்பட்டு டாக்டரிடம் சென்றார். டாக்டர் இந்த நோய் இங்கே சரியாகாது. ரூ.60,000 செலவு செய்து பெரிய மருத்துவமனையில் பாருங்கள் என்று கூறினார். அப்பொழுது விசுவாசி ஒருவர் இவருக்கு இயேசுவைப்பற்றிக் கூறினார். இவர் கேட்டு இயேசுவை விசுவாசித்தார். ஊழியர் இவருக்காக ஜெபித்தவுடன் நோயி–ருந்தும், பிசாசின் பிடியி–ருந்தும் விடுதலையாக்கப்பட்டார். சண்டைகளி–ருந்தும், விபச்சாரப் பாவங்களி–ருந்தும் தேவன் விடுதலையாக்கினார். இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொண்டு தினமும் ஜெபித்து தன்னை இயேசுவுக்கு அர்ப்பணித்தார். இந்த கிராமத்தை தப்புவிக்க தேவன் தன்னை பாவத்தி–ருந்து விடுதலையாக்கினார் என்று தன்னை ஊழியத்திற்கு ஒப்புக்கொடுத்தார். ஷாலோம் சுதேச ஊழியர் சாம்ஜீ மேடா மூலமாக இவருக்கு ஊழியம் செய்வதற்கான வழி கிடைத்தது. உடனே தன்னை ஊழியம் செய்ய அர்ப்பணித்து ஷாலோம் ஊழியத்தில் இணைந்து ஊழியம் செய்து வருகிறார். இவருடைய குடும்பத்திற்காகவும் ஊழியத்திற்காகவும் ஜெபித்துக்கொள்ளுங்கள்.

இவரைத் தாங்குபவர் : **சகோ. K.N. ராஜன்,** மார்த்தாண்டம்


# உண்டியலைப் பற்றி



அன்பான உண்டியல் ஆதரவாளர்களே!

இந்த கடிதம் மூலம் உங்களோடு தொடர்பு கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். பீல் ஆதிவாசி பிள்ளைகளும் நன்றாக படித்து முன்னேறி வருகிறார்கள். எங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட உண்டிய—ல் உள்ள காணிக்கையை இந்த கல்வியாண்டு பீல் ஆதிவாசி பிள்ளைகளின் படிப்பிற்காக உற்சாகத்தோடு கொடுத்து அவர்களின் தேவைகளை சந்திப்பீர்கள் என்று நம்புகிறோம். பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக அனுதினமும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். நாங்கள் உங்களுக்காகவும், உங்களுடைய குடும்பத்திற்காகவும் அனுதினமும் ஜெபிக்கிறோம். நீங்கள் பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக கொடுக்கும் தொகையை எங்கள் பிரதிநிதிகள் மூலமாகவோ அல்லது உண்டியலைத் திறந்து எடுத்து M.O, D.D, Cheque மூலமாக Sharing Love Mission பெயருக்கு தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்களின் தெளிவான முகவரியுடன், **உண்டிய—ன் எண்ணையும்** (Box No.) எழுதி அனுப்ப மிக அன்போடு கேட்கிறோம். உங்களுக்கு அதை திறக்க சாவி (Key) வேண்டுமானால் 9345675468 இந்த செல் நம்பருக்கு தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு சாவியை (Key) அனுப்பி வைக்கிறோம்.

# *சந்தாவைப் பற்றி*



அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலர் குஜராத், மத்தியபிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் உள்ள பீல் ஆதிவாசிகள் மத்தியில் நடைபெறும் மிஷனெரி பணிகளுக்காக காணிக்கை அனுப்பும் ஆதரவாளர்களுக்கு ஊழியத்தைப் பற்றி அறிந்து கொள்ளவும், ஊழியத்திற்காக பாரத்துடன் ஜெபிப்பதற்காகவும் இந்த மலரை அனுப்புகிறோம்.

அன்பான ஆதரவாளர்களே, நீங்கள் அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலரைப் பெற்று கொண்டிப்பீர்களானால் இந்த வருடத்திற்கான (2008) பத்திரிக்கைச் சந்தாவை செலுத்தி பத்திரிக்கை ஊழியத்தை தாங்கவும், பத்திரிக்கை ஊழியம் வளர்ச்சி அடையவும் ஜெபிக்க அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

**ஆண்டு சந்தா : ரூ.60/—  ஆயுள் சந்தா : ரூ.600/—**

# பணித்தள சாட்சிகள்

தேவனுக்கே மகிமை

**சகோ. ஹவ்சிங் சங்காடா** **பரேவா (குஜராத்)**
ஜோஸ்னாபேன் புரியா என்ற சகோதரி 1 மாதமாக காய்ச்சல் மற்றும் அம்மை நோயினால் கஷ்டப்பட்டாள். அநேக மருந்துகள் சாப்பிட்டும் சரியாகவில்லை. இறுதியாக என்னிடம் ஜெபிக்க வந்தாள். நான் அவளுக்காக விசுவாசத்துடன் ஜெபித்தபோது தேவன் அந்த சகோதரியை தொட்டு பரிபூரண சுகத்தைக் கொடுத்தார்.

**சகோ. சாம்ஜி மெய்டா** **ஜெரிகோட் (குஜராத்)**
தோட்பாய் மெய்டா என்ற சகோதரரின் 7வயது மகனுக்கு சிறுநீர் வராமல் நின்று விட்டது. மருத்துவரிடம் சென்று மருந்துகள் சாப்பிட்டும் சரியாகவில்லை. அந்த சிறுவனுக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் ஒரு மணிநேரத்தில் சிறுநீர் செல்ல கிருபை செய்தார்.

**சகோ. மஜு R. டாமோர்** **தேவா–யா (குஜராத்)**
காந்தாபேன் என்ற சகோதரிக்கு சரீரத்தில் கட்டி இருந்தது. இதனால் மனமுடைந்து போன அந்த சகோதரி மரித்துவிடலாம் என்று யோசித்தாள். இந்த சூழ்நிலையில் நம் சபை விசுவாசி ஒருவர் இயேசுவைப் பற்றிக் கூறினார். உடனே அந்த சகோதரி இயேசுவை விசுவாசித்து இயேசுவே நான் மரித்தாலும் உமக்காக, நான் வாழ்ந்தாலும் உமக்காக என அறிக்கையிட்டாள். தேவன் இவளுடைய விசுவாசத்தைக் கனப்படுத்தி 12 நாட்களில் கட்டி மறையும்படி செய்தார்.

**சகோ. நாவல்சிங் ய. பில்வால்** **கலாளியாவாட் (குஜராத்)**
மன்னுபாய் டாமோர் என்ற சகோதரர் பிசாசின் பிடியினால் 2 ஆண்டுகளாக கட்டப்பட்டு, பைத்தியமாக காணப்பட்டார். இதனால் இவரை கயிற்றில் கட்டி வைத்திருந்தார்கள். நிலங்களையெல்லாம் விற்று ரூ. 35,000/– வரை மந்திரவாதிகளிடம் செலவழித்தும் இவருக்கு குணமாகவில்லை. இறுதியாக நமது சபைக்கு கொண்டு வந்தனர் எண்ணெய் பூசி பாரத்துடன் ஜெபித்தபோது தேவன் அந்த சகோதரருக்கு பூரண சுகத்தைக் கொடுத்தார்.

**சகோ. தார்சிங் கட்டாரா** **பட்லா (இராஜஸ்தான்)**
சம்சுபிதா டாமோர் என்ற சகோதரர் அழுக்குப் பொருட்களைச் சேர்க்கக்கூடிய பைத்தியமாக இருந்தார். இவரை ஜெபிப்பதற்காக என்னுடைய வீட்டிற்கு அழைத்து வந்தார்கள். நானும் சபையின் விசுவாசிகளும் இணைந்து இந்த சகோதரனுக்காக ஜெபித்தபோது தேவன் பூரண விடுதலையைக் கொடுத்தார்.

**சகோ. ஜாலம் S. டின்டோர்** **தாடாவாலா (இராஜஸ்தான்)**

காளுபாய் என்ற சகோதரருக்கு 8 நாட்களாக சரீரத்தில் சிறு கட்டிகள் ஏற்பட்டு மிகவும் கஷ்டப்பட்டார். மருத்துவமனைக்குச் சென்ற மருந்துகள் சாப்பிட்டும் சரியாகவில்லை. இறுதியாக ஞாயிறு ஆராதனையில் வந்து அமர்ந்தார். இவருக்காக எண்ணெய்பூசி விசுவாசத்துடன் ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

**சகோ. சாந்திலால் அஹாரி புட்டாலா (இராஜஸ்தான்)**

அனிதாபேன் என்ற சகோதரி பிரசவித்த சிறிது நேரத்தில் தாயும், குழந்தையும் நோயினால் பாதிக்கப்பட்டார்கள். இந்த சகோதரியின் கணவன் ஜெபிக்கும்படி என்னை அழைத்தார்கள். நான் சென்று எண்ணெய்பூசி ஜெபித்தபோது 4 மணி நேரத்தில் தேவன் தாய்க்கும், குழந்தைக்கும் நல்ல சுகத்தைக் கொடுத்தார்.

**சகோ. ரமேஷ் K. கட்டாரா துமெட் (இராஜஸ்தான்)**

சுசீலாபேன் என்ற சகோதரி பயங்கரமான நோயினால் பாதிக்கப்பட்டிருந்தாள். அநேக மருத்துவமனைக்குச் சென்று மருந்துகள் சாப்பிட்டும், மந்திரவாதியிடம் சென்று 10 கோழிகள் மற்றும் 5 ஆடுகள் ப– செலுத்தியும் 30,000/– ரூபாய் வரை செலவழித்தும் சரியாகவில்லை. இறுதியாக நம்முடைய சபைக்கு வந்து விசுவாசத்துடன் ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

**சகோ. ஹரிசந்திர மெய்டா பாண்டா (மத்தியபிரதேசம்)**

ராஜேஷ் என்ற சகோதரர் பைத்தியமாகிவிட்டார். இதனால் இவர் வீட்டிற்கு செல்லவே மாட்டார். இதனால் இவருடைய குடும்பத்தார் கஷ்டத்திலும் வேதனையிலும் இருந்தார்கள். இந்த சகோதரனுக்காக நாங்கள் விசுவாசித்து ஜெபித்தபோது தேவன் பூரண விடுதலையைக் கொடுத்தார். இந்த அற்புதத்தைக் கண்ட இவருடைய குடும்பத்தார் இயேசுவை விசுவாசித்து இரட்சிக்கப்பட்டார்கள்.

**சகோ. ரத்தேஸ்யாம் சோலான்கி கோசால்யா (மத்தியபிரதேசம்)**

சங்கீதாபேன் என்ற சகோதரிக்கு இரத்தப்போக்கு அதிகமாக இருந்தது. அந்த சகோதரி ஆலய ஆராதனையில் பங்கு பெற்று விசுவாசத்துடன் ஜெபித்தபோது தேவன் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார்.

**சகோ. பால்முனியா குட்டாயா (மத்தியபிரதேசம்)**

தாவ்ரிபேன் என்ற சகோதரியினுடைய மகள் குளத்தில் விழுந்துவிட்டாள். அவளை வெளியே எடுத்துப் பார்த்தபோது அவள் மரித்துவிட்டாள். நாங்கள் அவளுக்காக அழுது விசுவாசித்து ஜெபித்தோம். சில நிமிடங்களுக்குப் பின் அந்த சகோதரியின் மகளின் உயிர் திரும்ப வந்தது.

**சகோ. துபா–யா மெய்டா நகர்புரா (மத்தியபிரதேசம்)**

ராங்கி கிராமத்தில் நடைபெறும் ஆராதனையையும் நடைபெறாமல் தடை செய்தார்கள். நாங்கள் 8 நாட்கள் உபவாசித்து ஜெபித்தோம். தேவன் தடை நீக்கி ஆராதனை நடக்க கிருபை செய்தார்.



# ஆஸ்வால்ட் ஜே. ஸ்மித்

மிஷனெரி முன்னோடிகள்

**ஆஸ்வால்ட் ஜே.ஸ்மித்** கனடா நாட்டின் ஒன்டாரியோ மாநிலத்தில் உள்ள ஓடிஸ்ஸாவில் 1889–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8–ஆம் தேதி பிறந்தார். இவரது தந்தை ஒரு தந்தி அலுவலர். இளமையிலேயே ஜெபிப்பதிலும் ஆலயத்திற்குச் செல்வதிலும் ஆர்வம் காட்டினார். என்றாலும் இரட்சிப்பு என்றால் என்னவென்பதை இவர் அறியவில்லை. குடிகாரன் ரிச்சார்ட்சன் மற்றும் துன்மார்க்கனான ஒரு அனாதை ஆகியோர் இயேசுவால் இரட்சிக்கப்பட்டதை அறிந்ததன் மூலம் தானும் இரட்சிப்பின் அனுபவம் பெற வாஞ்சித்தார்.

தனது 16–வது வயதில் சுவிசேஷகர் டோடி நடத்திய கூட்டத்தில் கலந்துகொண்டார். அவர் அடிக்கடி கூறிய ஏசாயா 53 : 5–ஆம் வசனம் இவரைத் தொட்டது. தனது உள்ளத்தில் கிறிஸ்து வந்ததையும் தான் மறுபடியும் பிறந்ததையும் உணர்ந்தார். தானும் சுவிசேஷம் அறிவிக்க வேண்டும் என்ற வாஞ்சையில் வேதாகமப் பள்ளியில் சேர்ந்தார். 1908–ஆம் ஆண்டு செவர்ன் நகரில் முதன் முறைபிரசங்கித்தார்.

1918–ல் ஊழிய வாஞ்சையுள்ள பில்–ங்ஸ் என்ற பெண்மணியை மணந்தார். முதலாவது பிரஸ் பைட்டிரியன் சபை ஆலயத்திலும் பின்னர் டேல் ஆலயத்திலும் போதகராகப் பணிபுரிந்தார். பின்னர் கனடாவில் இவர் நிறுவிய பீப்பிள்ஸ் சபை ஆலயத்தில் பணியாற்றினார். 1929–ஆம் ஆண்டு ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று அங்குள்ள ரஷ்ய

மிஷனெரிப் பணித்தளங்களில் ஊழியம் செய்தார். இவரது முயற்சியால் ஸ்பெயின் மற்றும் ரீகாவில் வேதாகமப் பள்ளிகளும் நிறுவப்பட்டன. பிரான்ஸ் மற்றும் பெல்ஜியம் நாடுகளுக்கு மிஷனெரிகள் அனுப்பப்பட்டனர். நீங்கள் உலகமெங்கும் போய் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். என்ற இயேசுக் கிறிஸ்துவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து 1924 முதல் 1970 வரை உலகின் 70 நாடுகளில் மிஷனெரி ஊழியம் செய்துள்ளார்.

மிஷனெரிகளை உருவாக்குவதில் இவருக்கு இணையாக எவருமில்லையென பில்–கிரஹாம் இவரைப் பற்றி கூறுகிறார். இவருடைய முயற்சியால் 450 மிஷனெரிகள் உலகெங்கும் அனுப்பப்பட்டனர். ஆண்டொன்றுக்கு 5 லட்சம் டாலர்கள் இதற்கென செலவிடப்பட்டது.

இவரால் எழுதப்பட்ட 35 புத்தகங்கள் 100 மொழிகளில் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டன. சுமார் 1200 சுவிசேஷப் பாடல்கள் இயற்றியுள்ளார். பீப்பிள்ஸ் மேகசின் என்ற பத்திரிக்கையின் ஆசிரியராக 50 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். சுவிசேஷத்திற்கென தன்னையே அர்ப்பணித்த இவர் உண்மையிலேயே மறக்க முடியாத மாமனிதர் ஆவார்.


**எங்களுடன் தொடர்பு கொள்ள**

தலைமை அலுவலகம்

**Sharing Love Mission**

168/5, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.`

Phone: 0461 - 2375468
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்

Bro. V. Devadoss
Founder & General Secretary
Shalom, Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

email : info@shalommission.in, Website : www.shalommission.in



# ஜெபியுங்கள்



- 80 லட்சம் பீல் மக்களும் நம் தலைமுறையில் தேவனை அறிந்து கொள்ளும்படியாக ஜெபியுங்கள்.
- இந்த வருடத்தில் தேவன் வாக்குரைத்தபடியே ஊழியத்தில் இரண்டு மடங்கு ஆசீர்வாதம் தரும்படியாக ஜெபியுங்கள்.
- அனைத்து சுதேச ஊழியர்கள் பரிசுத்தமாகவும், சாட்சியோடும், வல்லமையாகவும் ஊழியம் செய்யும்படியாக, எல்லா சபைகளிலும் குறைந்தது 100 குடும்பங்களை தேவன் கொடுக்கும்படியாகவும் ஜெபியுங்கள்.
- 100 புதிய கிராம ஆலயங்கள் கட்டப்பட அனுமதி கிடைக்க, தடையில்லாமல் கட்டப்படவும் அனுதினமும் ஜெபியுங்கள்.
- 500 சபைகளிலுள்ள 3500 மூப்பர்களுக்கு கூட்டங்கள் நடத்தப்பட ஜெபியுங்கள்.
- ஆதிவாசி பிள்ளைகளின் ஞாயிறு வகுப்பு, விடுமுறை வேதாகம வகுப்புகள் ஆசீர்வதிக்கப்படவும் 3 விடுதிகளும் ஆசீர்வதிக்கப்படவும், அந்தர்வே–யா மற்றும் டெப்ரி விடுதி கட்டப்படவும், 1000 பிள்ளைகளை படிக்க வைக்கவும் 1000 ஆதரவாளர்கள் எழும்பவும் ஜெபியுங்கள்.
- மாதம் ரூ. 500 கொடுக்கக்கூடிய 400 கிராம ஆதரவாளர்கள் எழும்பும்படியாக ஜெபியுங்கள்.
- தூத்துக்குடி தலைமை அலுவலக பணிகளை தேவன் ஆசீர்வதிக்க பணித்தள அலுவலகப் பணிகளை தேவன் ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.
- நம்முடைய ஆதரவாளர்கள், பிரதிநிதிகள், ஒவ்வொருவரையும் தேவன் அபரிதமாக ஆசீர்வதிக்கும்படியாக ஜெபியுங்கள்.
- பணித்தளத்தில் தேவன் இந்த ஆண்டு நல்ல மழையை தரும்படியாக பாரத்தோடு ஜெபியுங்கள்.
- இராஜஸ்தான் மாநிலத்தில் நம்முடைய ஷாலோம் பள்ளிக்கூடத்திற்கென்று உடனே கட்டிடங்கள் கட்டப்பட பாரத்தோடு ஜெபியுங்கள்.
- சகோ. தேவதாஸ், சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்களின் பாதுகாவலுக்காகவும், நல்ல சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.
- Compassion India மூலமாக குஜராத் மாநிலத்தில் ஹிரோலா, ஜெரி கிராமத்தில் நடைபெறும் "ஆதிவாசி சிறுவர் முன்னேற்ற திட்டத்திற்காக" ஜெபியுங்கள்.

# களச்செய்திகள் – குஜராத்

## துதியுங்கள்

- கொலானா கிராம சபையில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் 360 பேர்கள் கலந்து கொண்டு தேவனை ஆராதித்தார்கள். ஞாயிறு பள்ளியில் 100 பிள்ளைகள் கலந்து கொண்டு ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்து வருகிறார்கள்.
- உஸ்வானியா கிராம சபையில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் 105 பேர்கள் கலந்து கொண்டு தேவனை ஆராதித்தார்கள். புதிதாக 2 பேர் ஆலய ஆராதனையில் கலந்து கொண்டார்கள். ஞாயிறு பள்ளியில் 15 பிள்ளைகள் கலந்து கொண்டு ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்து வருகிறார்கள்.
- ஜெரிகோட் சபையில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் 284 பேர்கள் கலந்து கொண்டு தேவனை ஆராதித்தார்கள். ஞாயிறு பள்ளியில் 140 பிள்ளைகள் கலந்து கொண்டு ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்து வருகிறார்கள்.
- சிமளியா சபையில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் 248 பேர்கள் கலந்து கொண்டு தேவனை ஆராதித்தார்கள். புதிதாக 2 குடும்பம் ஆராதனையில் பங்குபெற்றார்கள்.

## ஜெபியுங்கள்

- –ம்பாகா– கிராமத்திலுள்ள விக்கிரக வழிபாடு, அந்தகார இருள் நீங்க பூஜை செய்யும் மக்கள், ஊழியத்திற்கு விரோதமாக எதிர்ப்பு தெரிவிக்கிறவர்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ள ஜெபியுங்கள்.
- சன்னடா கிராமத்திலுள்ள தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் ஊழியத்திற்கு விரோதமாக எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். இவர்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ள ஜெபியுங்கள்.
- கட்லா கிராமத்தில் சுவிஷேசத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் மக்கள் தேவனின் அற்புதமான கிரியைகளைப் பார்த்து இரட்சிக்கப்படும் படியாக ஜெபியுங்கள்.
- நான்தலாவ் கிராமத்தில் ஆலயம் கட்டப்பட ஜெபியுங்கள், பதடியா, பாடாடுங்கரி ஆகிய கிராமங்களில் ஊழியர்கள் எழும்பும்படியாக ஜெபியுங்கள்.

# களச்செய்திகள் – மத்தியபிரதேசம்

## துதியுங்கள்

- காக்கன்வானி கிராம சபையில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் 200 பேர்கள் கலந்து கொண்டு தேவனை ஆராதித்தார்கள். புதிதாக 4 பேர் ஆராதனையில் பங்குபெற்றார்கள். ஞாயிறு பள்ளியில் 25 பிள்ளைகள் கலந்து கொண்டு ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்து வருகிறார்கள்.

- கேடி சபையில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் 350 பேர்கள் கலந்து கொண்டு தேவனை ஆராதித்தார்கள். புதிதாக ஒரு குடும்பம் ஆராதனையில் பங்குபெற்றார்கள். ஞாயிறு பள்ளியில் 98 பிள்ளைகள் கலந்து கொண்டு ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்து வருகிறார்கள்.

- நாகன்வாட் கிராம சபையில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் 420 பேர்கள் கலந்து கொண்டு தேவனை ஆராதித்தார்கள். புதிதாக 2 குடும்பம் ஆராதனையில் பங்குபெற்றார்கள். ஞாயிறு பள்ளியில் 20 பிள்ளைகள் கலந்து கொண்டு ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்து வருகிறார்கள்.

## ஜெபியுங்கள்

- காலாபிப்லா கிராமத்தில் ஊழியத்திற்கு விரோதமாக எதிர்ப்பு தெரிவிக்கிற மக்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ள ஜெபியுங்கள்.

- கோசல்யா கிராமத்திலுள்ள தலைவர்கள் ,அதிகாரிகள் மற்றும் ஊழியத்திற்கு விரோதமாக எதிர்ப்பு தெரிவிக்கிறவர்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ள ஜெபியுங்கள்.

- ஜுனாகாவாசா கிராமத்தில் நமது விசுவாசிகளின் விளைந்த பயிர்களை அறுப்பதற்கு சற்றுமுன்னதாக எல்லாம் தீயில் எரிந்து அழிந்துவிட்டது. 4 விசுவாசிகளின் ரூ.80000 மதிப்புள்ள தானியங்கள் அழிந்து விட்டன. அருகில் உள்ளவர்கள் நாங்கள் பார்க்கவில்லை என்கிறார்கள். காவல்துறையில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது. இழப்புகளை தேவன் தரும்படியாக ஜெபியுங்கள்.

- சஜே– கிராமத்தில் உள்ள அந்தகார சக்திகள் மற்றும் சாத்தானின் கிரியைகள் அழிக்கப்படவும், பீல் மக்கள் அனைவரும் இரட்சிக்கப்படும்படியாகவும் ஜெபியுங்கள்.

# களச்செய்திகள் – இராஜஸ்தான்

## துதியுங்கள்

- கேட்பூர் கிராம சபையில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் 490 பேர்கள் கலந்து கொண்டு தேவனை ஆராதித்தார்கள். புதிதாக 10 குடும்பம் ஆராதனையில் பங்குபெற்றார்கள்.
- கதேடியா கிராமத்தைச் சேர்ந்த ஹார்டாப்பாய் என்ற சகோதரரின் மனைவிக்கு தேவன் ஜெபத்தின் மூலம் சுகப்பிரசவத்தில் ஒரு பெண்குழந்தையைக் கொடுத்தார். தேவனுக்கே நன்றி.
- கோட்டாரா கிராம சபையில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் 240 பேர்கள் கலந்து கொண்டு தேவனை ஆராதித்தார்கள். புதிதாக 7 பேர் ஆராதனையில் பங்குபெற்றார்கள். ஞாயிறு பள்ளியில் 70 பிள்ளைகள் கலந்து கொண்டு ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்து வருகிறார்கள்.
- வாகனர் கிராம சபையில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் 220 பேர்கள் கலந்து கொண்டு தேவனை ஆராதித்தார்கள். புதிதாக 1 குடும்பம் ஆராதனையில் பங்குபெற்றார்கள். ஞாயிறு பள்ளியில் 30 பிள்ளைகள் கலந்து கொண்டு ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்து வருகிறார்கள்.

## ஜெபியுங்கள்

- கல்சா கிராமத்தைச் சேர்ந்த ஹக்ரிபேன் என்ற சகோதரி மனநோயி–ருந்து சுகமடைய ஜெபியுங்கள்.
- சோக்புரா கிராமத்தைச் சேர்ந்த பூர்ஜிபாய் என்ற சகோதரர் விசுவாசிகளுக்கு விரோதமாக செயல்படுகிறார். அவர் மனந்திரும்பும்படியாக ஜெபியுங்கள்.
- பொட்ட–யா பாடா கிராமத்தைச் சேர்ந்த கோர்சிங் என்ற சகோதரனின் மகன் நன்றாக நடக்க வேண்டிய பெலனை தேவன் தரும்படி ஜெபியுங்கள்.
- பேடவ்நாத் கிராமத்தில் 105 குடும்பம் உள்ளது. இவர்கள் அனைவரும் இயேசுவை ஏற்றுக்கொள்ள ஜெபியுங்கள்.

# பணித்தளத்தில் மறக்க முடியாத நிகழ்வுகள்

## பாம்பின் வாயிலிருந்து.....



மத்தியபிரதேசத்தில் ஜாபுவா மாவட்டத்தில் பெற்றோர்கள் மிகவும் கஷ்டப்பட்டு, செலவு செய்து மகனுக்கு திருமணம் செய்து பெண்ணை வீட்டிற்கு அழைத்து வருவது வழக்கம். ஆனால் ஜாம்பு கேடா கிராமத்தில் அப்படி திருமணம் பண்ணி வந்த பெண்கள் புருஷனோடு வாழாமல் பிரிந்து தன்னுடைய தகப்பனார் வீட்டிற்கு சென்று விடுவார்கள் இப்படி பாதிக்கப்பட்ட வா—பர்கள் அநேகர். இப்படிப்பட்ட காரியத்தை பார்த்துத் தாங்கமுடியாமல் பாரம் கொண்ட சுதேச ஊழியரின் மனைவி பாசுடி தி—ப்சிங் இயேசுவை நோக்கி ஜெபிக்க ஆரம்பித்தாள். அப்பொழுது இப்படிப்பட்ட வா—பர்களை அழைத்து இயேசுவைப் பற்றிக் கூறி அவர்கள் தலை மீது கைகளை வைத்து ஜெபி அப்பொழுது அவர்களுடைய குடும்பங்கள் சாபங்கள் நீங்கி கட்டப்படும் என்று ஆவியானவர் கூறினார். அதன்படியே அந்த சகோதரி ஜெபித்து ஆயத்தமாகி வா—பர்களை அழைத்து இயேசுவை பற்றி கூறி ஜெபித்து அனுப்பினார்கள்.

அன்று இரவே பிசாசு அந்த சகோதரியிடம் வந்து, நான்தான் இங்கு குடும்பங்களை கெடுத்து வாழ விடாமல் செய்து கொண்டிருக்கிறேன். நான்தான் இந்த கிராமத்தை ஆளுகை செய்கின்றேன். நீ யார்? என்னை விட பெரியவளாகிவிட்டாயோ? என்று கூறி, நான் உன்னை என்ன செய்கிறேன் பார் என்று கூறி பயமுறுத்தினது. மறுநாள் காலை தனது புருஷனோடு இந்த காரியத்தை பகிர்ந்து கொண்டு இரண்டு பேருமாக சேர்ந்து ஜெபித்துவிட்டு ஊழியத்திற்கு சென்றுவிட்டார்கள். அன்று சாயங்காலம் இந்த சகோதரி வீட்டுவாச—ல் நின்று கொண்டிருந்தபோது ஒரு பெரிய பாம்பு ஒன்று விரைவாக இவளை நோக்கி ஒடி வந்தது. வெளியே நிற்கிற யாரையும் அது கவனிக்காமல் இவளை மட்டுமே நோக்கி வந்தபடியால் இவள் உடனே வீட்டிற்குள் ஒடி கதவை அடைக்கும் முன்பாக பாம்பும் இவளைத் தொடர்ந்து வீட்டிற்குள் நுழைந்துவிட்டது. இவள் அடுத்த

அறைக்குள் ஓடினாள் பாம்பும் விரைந்தது. இப்படியாக இவளை மட்டுமே குறிவைத்து ஓடிச்சென்று அந்த சகோதரியின் கா–ல் தீண்டிவிட்டது. உடனடியாக இந்த சகோதரி இவ்வாறு கூறினாள் "வேதத்தில் எழுதப்பட்டிருக்கிறது, பவுலையும் ஒரு முறை பாம்பு கடித்தது ஆனால் அவன் அதை பூச்சியைப் போல உதறிவிட்டான். அவன் ஜீவனை பெற்று இயசேுவுக்கு ஊழியம் செய்து எத்தனையோ சபைகளை உருவாக்கினான். இதேபோல தான் எனக்கும் இயேசு ஜீவனைக் கொடுப்பார். நான் இயேசுவுக்கு ஊழியம் செய்வேன்" என்றாள். அதற்குள்ளாக மற்றவர்கள் கட்டையை எடுத்து அந்த பாம்பை அடித்து கொன்றார்கள். இந்த சகோதரி உயிர் பிழைத்து இன்று வைராக்கியமாய் இயேசுவுக்கு சாட்சியாக ஊழியம் செய்து வருகிறாள்.

**"ஒன்றும் உங்களை சேதப்படுத்தாது என்ற வாக்கியம் நிறைவேறியது."**

## பிசாசின் பிடியிலிருந்து.....

மத்தியபிரதேசத்தில் உள்ள நாங்கன்கேடி என்ற கிராமத்தில் உள்ள கிறிஸ்தவ குடும்பத்திற்கு விரோதமாக திடீரென்று 13 வயது நிரம்பிய சுமார் 9 பையன்கள் எழும்பி, கிறிஸ்தவ வீட்டிற்குள் நுழைந்து கைகளில் கம்பு, கத்தி எடுத்து கொண்டு எல்லா உடமைகளையும், பொருட்களையும் அடித்து நொறுக்கி, பைபிள், கிறிஸ்தவ கேசட் டேப்ரிக்கார்டர் போன்றவற்றை உடைத்தெறிந்தார்கள். எல்லாரும் பயந்து வெளியே ஓடினார்கள். இந்த பையன்கள் செய்கிற அக்கிரமம் அதிகரிக்கவே சபை விசுவாசிகள் போலீசாரிடம் சென்று கூறுகையில், அவர்களும் விரைந்து வந்து அந்த 9 பையன்களை பிடித்துக் கொண்டுபோய் விசாரணை செய்தார்கள். நடந்தது என்ன தெரியுமா? அவரக்ள் மறு மொழி பேசாமல் அப்படியே 9 பேரும் பிசாசு பிடித்து ஒரே ஆட்டமாக ஆடுகிறார்கள். நிறுத்தவே முடியாத நிலை. உடனே போலீஸ்காரர்கள் நம் மூப்பர்களை அழைத்து இவர்கள் பிசாசினால் ஆடுகிறார்கள். இவர்களை நாங்கள் எப்படி நிறுத்த முடியும். நீங்கள்தான் எதாவது செய்து இவர்களை அடக்குங்கள் என்று கூறி அனுப்பினார்கள். மூப்பர்கள் எல்லாரும் வீட்டிற்கு வந்து ஒன்று கூடி ஜெபித்தபின் பிசாசின் ஆக்ரோஷத்தி–ருந்து விடுதலை பெற்றார்கள்.

# EeLÞdÏ ERY GeLÞdÏ ERÜeLs

- உங்கள் விலாசத்தில் மாறுதல்கள், திருத்தங்கள் இருக்குமென்றால் சரி செய்து ***பழைய, புதிய முகவரிகளை*** தெரியப்படுத்துங்கள். ஏனெனில் நாங்கள் அனுப்புகின்ற பத்திரிக்கைகள் பல எங்களுக்குத் திருப்பி அனுப்பப்படுகின்றது. உங்களுக்கு ***ஒன்றுக்கு மேற்பட்ட பத்திரிக்கைகள்*** வருகிறதென்றால் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.

- உங்கள் பகுதியில் நம் மிஷனெரி ஊழியத்தின் பிரதிநிதிகள் இருப்பார்கள் என்றால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதைப் பெற்றுக்கொள்ளுங்கள். மேலும் தலைமை அலுவலகத்திற்கு உங்கள் நகல் இரசீதும், பணமும் கிடைத்த பின்பு தலைமை அலுவலகத்தி–ருந்து உங்களுக்கு நன்றி கடிதம் அனுப்பி வைக்கப்படும்.

- நம்முடைய அலுவலகபணிகள் அனைத்தும் Computer மயமாக்கப்பட்டுள்ளது. அனைத்து ஆதரவாளர்களுக்கும் குறியீட்டு எண்(Sponser ID No) கொடுக்கப்பட்டுள்ளது. எனவே நீங்கள் எங்களை தொடர்பு கொள்ளும்போது தங்கள் குறியீட்டு எண்ணை (Sponser ID No -யை) தவறாது எழுதுங்கள்.

- நீங்கள் அனுப்புகின்ற காணிக்கை, மணியார்டர், டிராப்ட், காசோலை மற்றும் கடிதங்களுக்கு அதிகபட்ச இரு வாரங்களுக்குள் இரசீதும், நன்றிக் கடிதமும் வரவில்லையென்றால், உடனடியாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு தொலைபேசி அல்லது கடிதம் மூலம் தெரியப்படுத்த வேண்டுகிறோம். அதற்கேற்ற நடவடிக்கை எடுக்க ஏதுவாயிருக்கும்.

- நீங்கள் M.O அனுப்பும் போது எங்களுக்குக் கிழித்துக் கொடுக்கும் பகுதியில் உங்கள் ***தெளிவான முகவரியையும், ஜெபக்குறிப்புகளையும்*** எழுதி அனுப்பினால் உங்களுக்காக பாரத்துடன் ஜெபிக்க மிகவும் கடமைப்பட்டுள்ளோம்.

- எங்களோடு தொடர்பு கொள்ளும்போது உங்களுடைய பங்காளர் எண்ணை (Partner No.) குறிப்பிடவும்.



## காணிக்கை அனுப்புவதற்கான வழிகள்

- தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள்.

- M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி கேட்டுக்கொள்கிறோம்.

- D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை Sharing Love Mission என்ற பெயருக்கு அனுப்பலாம்.

- நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ் கண்ட வங்கிகள் இருந்தால் அங்கேயே எங்கள் கணக்கில் காணிக்கையை செலுத்தலாம்.

வங்கி கணக்கு பெயர்

**Sharing Love Mission**

| | | |
|---|---|---|
| Tamilnad Mercantile Bank | - | 106100710400009 |
| Axis (U.T.I) Bank | - | 105010100094373 |
| I.C.I.C.I Bank | - | 613901112799 |

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

- இன்டர்நெட்டில் NET TRANSFER வசதி உங்களுக்கு இருந்தால் NET TRANSFER மூலமாகவும் அனுப்பலாம்.

- வெளிநாட்டில் வசிப்பவர்கள் “V. DEVADOSS” (or) Sharing Love Mission என்ற பெயருக்கு D.D., (or) Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம்.

## நாட்டு நடப்புச் செய்திகள்....

உலகில் முதன் முறையாக இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையமான இஸ்ரோ பி.எஸ்.எல்.சி9. ஒரே ராக்கெட்டில் பத்து செயற்கைகோள்களை வெற்றிகரமாக அனுப்பி சாதனை படைத்துள்ளது. இது முழுவதும் இந்திய விஞ்ஞானிகளால் நடத்தப்பட்டது.

---

இந்தியாவில் சென்ற நிதியாண்டில் மார்ச் 2007 முடிய செல்போன் வாடிக்கையாளர்கள் 12.14 கோடியாக இருந்தது. மார்ச் 2008 முடிய வாடிக்கையாளர்கள் 19.23 கோடியாக உயர்ந்துள்ளது. இதில் தமிழ்நாட்டில் மார்ச் 2008 முடிய செல்போன் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை 1.44 கோடியாக உயர்ந்துள்ளது.

---

தமிழ்நாட்டில் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் 1330 திருக்குறள் வரிகளுடன் திருவள்ளுவர் உருவம் கொண்ட பட்டுச்சேலை வெளியிட்டுள்ளது. இதை தமிழக மு. முதலமைச்சர் கருணாநிதி தலைமைச் செயலகத்தி–ருந்து அறிமுகப்படுத்தினார்.

---

கடந்த 18 ஆண்டுகளாக மீயான்மார் நாட்டில் இராணுவ ஆட்சியை எதிர்த்து ஜனநாயக ஆட்சி ஏற்படுத்துவதற்காக போராடி வரும் பெண் தலைவர் சூ–கீ யின் தைரியத்தை பாராட்டியும், மனஉறுதியை மெச்சியும் அமெரிக்க பாராளுமன்ற தங்கபதக்கத்தை வழங்க வேண்டும் என அமெரிக்க செனட்சபை தீர்மானித்துள்ளது. இது அமெரிக்காவின் மிக உயரிய விருதாகும்.

---

கடந்த மே மாதம் சீனா வில் ஏற்பட்ட பயங்கர பூகம்பத்தினால் சுமார் பணிரெண்டாயிரத்திற்கும் அதிகமானோர் இடிபாட்டிற்குள் சிக்கி உயிரிழந்தனர். மேலும் ஆயிரக்கணகானோர் படுகாயமடைந்துளனர். பல கோடிக்கணக்கான பொருளாதார இழப்பு சீனாவில் ஏற்பட்டுள்ளது.

–நன்றி தினத்தந்தி

# ஊழியத்தின் தேவைகளும் உங்கள் பங்கும்

- மாதந்தோறும் ரூ.1500/-கொடுத்து பீல் சுதேச ஊழியரை ஜெபித்து தாங்க முன் வரலாம்.
- ரூ.500/-மாதம் கொடுத்து ஊழிய சார்பு தேவைகள் சந்திக்கும்படி ஒரு கிராமத்தில் நடைபெறும் ஊழியத்தை தாங்கலாம்.
- ரூ.400/-மாதம் கொடுத்து ஆதிவாசி சிறுவர்களை பராமரிக்க முன் வரலாம்.
- ரூ.50,000/-கொடுத்து தேவையுள்ள இடத்தில் கிராம ஆலயம் கட்டுவதற்கு முன் வரலாம்.
- மூத்த சுதேச ஊழியர்களுக்கு ரூ.35,000/-மதிப்பில் இரு சக்கர வாகனம் **(Two Wheeler)**  தேவைப்படுகிறது.
- ஊழியத்திற்கு செல்ல ரூ.2,000/-மதிப்பில் மிதிவண்டி  **(Cycle)** 48 சுதேச ஊழியர்களுக்கு தேவைப்படுகிறது.
- பணித்தளத்தில் நடைபெறும் கூட்டங்கள், மூப்பர்கள் முகாம், சுதேச ஊழியர்கள் பயிற்சி ஆகியவற்றிற்கான செலவினை பொறுப்பெடுத்துக் கொள்ளலாம்.
- ரூ.70/-வீதம் குஜராத்தி, ஹிந்தி வேதாகமங்கள் பீல் விசுவாசிகள் வாங்க உதவ முன்வரலாம்.
- பீல் ஆதிவாசி மக்கள் இரட்சிப்பிற்காக ஜெபியுங்கள்.
- மாதந்தோறும் உங்களால் முடிந்த காணிக்கையை அனுப்புங்கள்.
- மற்றவர்களுக்கும் ஊழியத்தை அறிமுகப்படுத்துங்கள்.

Registered with the Registrar of News Paper in India
Under No. TNTAM/2004/16449.
Postal Regn. No. TTN-07/2006-2008. TN/WPP-95/SR/2006-2008
Postal at Chidambaranagar P.O. 628008 on 25th & 28th of every month.

# சிங்கப்பூர் ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்

சகோ.தேவதாஸ், சகோதரி வஹிதாதேவதாஸ் பங்கு பெறும்

## சபை எழுப்புதல் கூட்டங்கள்

நாள்:

ஜீன் 4 முதல் 11 வரை

இடம்:

பாசிர் பஞ்சங் தமிழ் மெத்தடிஸ்ட் சர்ச்,
சிங்கப்பூர்.



மேலும் தொடர்பு கொள்ள:
Rev. George Samuel Devavaram,
Ph: 0065 - 62780627
சகோ.சாமுவேல் சத்தியநாதன்
Ph:0065-65621285, 0065-97357763

Our Website: www.shalommission.in    Our E-mail: info@shalommission.in

Owned and Published by V. Devadoss from 168/5, Caldwell Colony, 3rd Street, Tuticorin - 628 008. and Printed by S. Joseph at Rajan Press, 59, Palayamkottai Road, Tuticorin - 628 002. Editor : V. Devadoss